# செந்தமிழ்

தொகுதி :95 திருவள்ளுவர் ஆண்டு 2032 அக்டோபர் 2001 பகுதி : 10

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டா. ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் :

இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. உயர்தனிச் செம்மொழி ..... 339

பெரும்புலவர் இரா.இளங்குமரன்

2. சங்கத்தமிழரின் வாழ்வியல் கூறுகள் ..... 353

சு.கு. பன்னீர்செல்வம்

3. ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - 1

அ.மா. பரிமணம் ..... 369

# உயர் தனிச் செம்மொழி

இரா.இளங்குமரன்

பரிதிமாற் கலைஞர் இயற்றிய 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் நூலின் முடிவுரையில் தமிழ், 'உயர் தனிச் செம்மொழி' என்பதை எடுத்துரைத்து விளக்கியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் திங்களிதழாகிய செந்தமிழின் முதல் இதழில் 'உயர் தனிச் செம்மொழி' என்னும் தலைப்பில் அக்கட்டுரை மீண்டும் வெளிப்பட்டுள்ளது(1903).

'Classical Language' என்னும் ஆங்கிலத் தொடரின் மொழியாக்கமாகப் பரிதிமாற் கலைஞர், 'உயர் தனிச் செம்மொழி' என வழங்கினார். அதன் இலக்கணத்தை வேண்டும் அளவால் உரைத்து விளக்கமும் செய்தார்:

" வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் 'உயர்தனிச் செம்மொழி' யாமாறு சிறிது காட்டுவாம்.

தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பலமொழிகட்கும் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவுடைமையும் உள்ள மொழியே 'உயர்மொழி.' இவ்விலக்கணம் தான் ஆராயுமிடத்துத் தமிழ், தெலுங்கு முதலியவற்றிற்கெல்லாம் தலைமையும், அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர் மொழியே என்க.

தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே 'தனிமொழி' எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவி மிகுந்தும், அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியின் உதவி களையப்படின், தெலுங்கு முதலிய இயங்குதல் ஒல்லா. மற்றுத் தமிழ்மொழி அவற்றின் உதவியில்லாமலே சிறிதும் இடர்ப்படுதல் இன்றித் தனித்து இனிமையின் இயங்கவல்லது. இஃது இந்திய மொழி நூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலின் தமிழ் தனிமொழியே என்க.

இனிச் செம்மொழியாவது யாது?

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் 'செம்மொழி'யாம் என்பது இலக்கணம். இம் மொழிநூல் இலக்கணம் தமிழ் மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன் முடிபுகளும் பொருண் முடிபுகளும் இன்றிச் சொற்றான் கருதிய பொருளைக், கேட்டான் தெள்ளிதின் உணர வல்லதாய்ப், பழையன கழிந்து புதியன புகுந்து திருத்த மெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க.

நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கு ஏற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்கள் ஏற்படுமிடத்துப் பிற பாஷைச் சொற்கள் அன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே, தமிழ்மொழி தூய்மொழியுமாம். எனவே தமிழ் செம்மொழி என்பது திண்ணம். இது பற்றியன்றே தொன்று தொட்டுத் தமிழ் மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவர்களால் நவின்றோதப் பெறுவது ஆயிற்று. ஆகவே, தென்னாட்டின்கண் சிறந்தொளிரா நின்ற அமிழ்தினும் இனிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது நிச்சயம்.

இவ்வளவு உயர்வும் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோ டொருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர் தனிச்செம்மொழி சம்ஸ்கிருதம் எனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச்செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம். "

என்பது பரிதிமாற் கலைஞர் உரை (தமிழ் மொழி வரலாறு பக். 110 - 111).

தமிழ் 'உயர்தனிச் செம்மொழியே' எனப் பரிதிமாற் கலைஞர் பூரணலிங்கர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் முதலியோர் வலியுறுத்தியும் "தமிழ் 'உள்நாட்டு மொழியே'; அதனை உயர்தனிச் செம்மொழி என்று ஆக்கினால் வடமொழியின் தனிச்சிறப்புக் குன்றும்; ஆகவே, அதனைத்

தடுத்தாக வேண்டும்" எனத் தமிழ்ப் பகைவர் வரிந்து கட்டி நின்றனர். இது பற்றிப் பரிதிமாற் கலைஞரின் செந்தமிழ்க் கட்டுரையின் நிறைவில்,

"இதனை நமது கனம் பொருந்திய இராசப் பிரதிநிதியவர்களும், சர்வகலாசாலையின் அவயவிகளும் உள்ளவாறே கவனித்து நடப்பார்களாக. இவர்கள் தமக்கு என்றும் குன்றாப் பழியை விளைக்கத் தக்க செயலிற் புகாது புகழ் பயக்கற்பால நல்லாற்றிற் சென்று நம் தமிழ் மொழியும் உயர்தனிச் செம்மொழி என்றே கொண்டொழுகுவார்களாக" என்கிறார்.

உயர்மொழி என்பதற்கு இலக்கணம் இரண்டு. ஒன்று: தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகளுக்கும் தலைமை என்பது. இதனை மெய்ப்பிக்கும் வகையில் பாவாணர் நூல்கள் பலவும் இருப்பினும் *திரவிடத்தாய்* என்பது ஒன்று சாலும். தன் பெயராலேயே இக்கருத்தை விளக்கும் நூல் அது.

இந்நூலின் முகவுரையில்,

"தமிழே திரவிடத் தாய் என்பது மிகத் தெளிவாய் இருப்பினும் 1891ஆம் ஆண்டிலேயே,

'*கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்*
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்'

என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் திட்டமாய்க் கூறியிருப்பவும், ஆராய்ச்சி இன்மையாலோ, கவலை இன்மையாலோ, துணிவின்மை யாலோ, தமிழ்ப்புலவர் எடுத்துக் காட்டாததனால் தமிழின் திரவிடத் தாய்மை பொதுமக்களால் அறியப்படா திருப்பதுடன், தமிழ் ஒரு புன் சிறு புது மொழியினும் தாழ்வாகக் கருதப்படுகின்றது.

"பெலுச்சித்தானத்திலும் வட இந்தியாவிலும் இன்னும் திரவிட மொழிகள் வழங்குவதையும், வடநாட்டு ஆரிய மொழிகளிலும் திரவிட நெறிமுறைகளே அடிப்படையாய் அமைந்து கிடப்பதையும், குச்சரமும்(குசராத்தி) மராட்டியும் பண்டைக் காலத்தில் பஞ்சத்திராவிடிகளில் இரண்டாக வடமொழியாளராலேயே

கொள்ளப்பட்டதையும், இந்திய மொழிகளில் எல்லாம் மூவிடப் பெயர்களும் முக்கியமான முறைப்பெயர்களும் தமிழ்ச் சொற்களாய் அல்லது தமிழ் வேரடிப் பிறந்தனவாய் இருப்பதையும், சென்ற நூற்றாண்டில் தெலுங்கு நாட்டிற்கும் கன்னட நாட்டிற்கும் சென்ற தமிழ்க் குறவர்(எறுக்கலவாரு அல்லது கொரவாரு) கூட, இன்று தமிழைத் தெலுங்கும் கன்னடமும் போல ஒலித்துப் பேசுவதையும் நோக்குமிடத்துத் தமிழிற் புணர்ச்சியும் பகுசொன்னிலையும் தோன்றாத தொன்முது காலத்தில், தமிழே இந்தியா முழுதும் தனிப் பேராட்சி பெற்றிருந்தமை புலனாம்" என்கிறார்.

ஒரு மொழி 'தாய்மொழி' என்பதனையும் அதன்வழிப் பிறந்த மொழிகள் எவை என்பதனையும் சிறப்பாக வெளிப்படுத்தும் சொற்கள் எவை என்பதையும் பாவாணர் அம்முகவுரையிலே குறிப்பிடுகிறார்.

"ஒரு மொழிக்கு அடிப்படையானவும். இன்றியமையாதனவுமான மூவிடப் பெயர்கள், முறைப்பெயர்கள், தட்டு முட்டுப் பெயர்கள், அக்கம் பக்கப் பொருட்பெயர்கள், பேரிடப் பெயர்கள், வா, போ முதலிய முக்கிய வினைகள், பல்வகைப் பண்புப் பெயர்கள், கை கால் முதலிய சினைப் பெயர்கள் ஆகிய இவை இயற்கையான வடிவிலும் வேர்ப் பொருள் தாங்கியும் எம்மொழியில் உள்ளனவோ அம்மொழியே அதற்குத் தாய் எனத் துணிதல் வேண்டும்" என்கிறார்.

செந்தமிழ் கொடுந்தமிழ் எனத் தமிழ் இருவகையாகவும், செந்தமிழ் நாடு கொடுந்தமிழ் நாடு எனத் தமிழ்நாடு இருவகையாகவும் பிரித்துக் கூறப்பட்டமை பழைய நூல்களில் உண்டு. சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்காகக் கூறுகிறார் தொல்காப்பியர். இவற்றுள் இயற்சொல்லும் திரிசொல்லும் செந்தமிழ்நாட்டுச் சொற்கள், திசைச்சொல் என்பது செந்தமிழ் நாடு சார்ந்த தெலுங்கு முதலியவை கொடுந்தமிழ்ச் சொற்கள் என்பவை அவையே. வடசொல் என்பது வடக்கில் இருந்து வந்த அயன் மொழிச் சொல் என்பார் பாவாணர்.

திசைச் சொற்கள் பொருள் திரிந்த சொல், வடிவு திரிந்த சொல், புதுச் சொல் என மூவகைப்படும் என்பார்.

1. பொருள் திரிந்த சொல்.

(எ-டு) செப்பு (தமிழ்) = விடைசொல்.

செப்பு (தெலுங்கு)= சொல்.

2. வடிவு திரிந்த சொல்.

(எ-டு) போயினான்(த) போயினாடு(தெ)

3. புதுச்சொல்.

(எ-டு) அடுகு (தெ)= கேள்.

"இங்ஙனம் மூவகைப்பட்ட திசைச் சொற்கள் மிகுந்த அல்லது கலந்த தமிழ் கொடுந்தமிழாம்" என்பார் (முன்னுரை.11)

ஒரு மொழியே சிறிது சிறிதாகப் பெயர்ந்து வழங்கியமையாலேயே வட நாடுகளை வேற்றுமொழி நாடு என்னாமல் மொழி பெயர் தேயம் என்றனர் நம் முன்னோர்.

தமிழில் இருந்து முதற்கண் பிரிந்து கொடுந்தமிழ் ஆனது கூர்ச்சரமும், மகாராட்டிரமுமாம். அதன்பின் தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை முறையே பிரிந்தன.

தெலுங்கு தனியாகப் பிரிந்து போனபின்பு 'ஆந்திர திராவிட பாஷை' என்னும் இணைமொழி வரலாயிற்று. இதனை வழங்கியவர் 'குமரில பட்டர்'. இவர் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

பின்பு கன்னடம் மலையாளம் பிரிய, தமிழ் என்னும் பெயர் பொருள் சுருங்கிச் சோழ பாண்டிய நாட்டுத் தமிழ்ப் பகுதியை மட்டும் குறிக்கும் சிறப்புப் பெயராயது. திராவிடம் என்பது தமிழை மட்டும் குறிப்பதாகவும் தெலுங்கு முதலியவற்றையும் சேர்த்துக் குறிப்பதாகவும் வழங்கியது. சென்ற நூற்றாண்டில்தான் கால்டுவெலார் திரவிட மொழிகளின் பொதுப்பெயராகவும் தொகுதிப் பெயராகவும் வரையறுத்தார்.

சேரநாட்டுத் தமிழ் கி.பி. 10ஆம் நூற்றாண்டுவரை செந்தமிழாயும் பின்பு 16ஆம் நூற்றாண்டுவரை கொடுந்தமிழாயும் இருந்து, அதன் பின் ஆரியக் கலப்பால் மலையாளம் ஆயது. இதனைக் கடைக் கழக நூல்களாலும் சிலப்பதிகாரம் புறப்பொருள் வெண்பாமாலை சேரமான்

பெருமான் பாடல், நம்பியாரூரர் தேவாரம், குலசேகர ஆழ்வார் திருமொழி என்பவற்றாலும் அந்நாட்டுக் கல்வெட்டு, செப்புப் பட்டயம், மலையாள நூல்கள் ஆயவற்றாலும் அறியலாம்.

"ஆரியக் கலப்பினாலேயே மாபெரும் திராவிடநாடு சீர்குலைந்து சின்னாபின்னமாய்ச் சிதைந்து கிடக்கிறது" என்கிறார் பாவாணர்.

கால்டுவெலார், "எவ்வகையிலும் திராவிட மொழிகளுக்குள் தலைசிறப்பப் பயன்படுத்தப்பட்ட தமிழ், வேண்டுமாயின் வடமொழித் தொடர்பை அறவே விலக்குவதுடன் தனித்து வழங்குதல் மட்டுமன்று" அதன் உதவியின்றித் தழைத்தோங்கவும் இயலும் என்கிறார்.

மேலும், "எல்லா நூல்களும் செந்தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றும், வடசொற்களையும் வடமொழி எழுத்துக்களையும் புறக்கணித்துள்ளது என்றும், வடமொழிச் சொற்களை விலக்குவதாலேயே சுவை மிகப் பெற்றுள்ளது என்றும், நாட்டுபுற மக்களின் பேச்சு மொழியில் வடசொற்கள் பெரிதும் விலக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடுகிறார்.

தமிழில் அமைந்துள்ள சொற்பெருக்கத்தையும் ஒரு பொருட் பலசொற்களையும் கால்டுவெலார் வியக்கிறார். தமிழில் வழங்கும் சொற்களையன்றித் தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகட்குரிய சொற்களையும் தமிழ் கொண்டுள்ளமையையும் விளக்குகிறார்.

உறைவிடப் பெயராகிய வீடு என்பது தெலுங்கில் வழங்கும் இல் (இல்லு) என்னும் சொல்லையும் கன்னடத்தில் வழங்கும் மனை (மனெ) என்னும் சொல்லையும் வடமொழி, பின்னிய மொழி முதலியவற்றுக்குரிய குடி என்னும் சொல்லையும் கொண்டு தமிழ், சொல் வடிவங்களுக்கும் வேர்களுக்கும் பொதுக்களஞ்சியமாகத் திகழ்கிறது என்கிறார்.

பழங்கன்னடம், பழமலையாளம் துளு, துடவு, கோண்டு, கூ முதலியன தமிழுடன் மிக ஒத்தியலையும் கால்டுவெல் சுட்டுகிறார்.

மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய மொழிகளிலுள்ள சொற்கள் தமிழடிப்பட்டனவையாக இருத்தலைப் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், அடிச்சொற்கள், தொடர்கள், பழமொழிகள், கதை என்பவற்றை எடுத்துக்காட்டி நிறுவும் பாவாணர், முடிவுரையாக, "இதுகாறும் கூறியவற்றால் தமிழல்-திரவிடமொழிகள் உயிரும் உடம்பும் போன்ற அடிப்படையும் முக்கியமுமான பகுதிகள் எல்லாம் தமிழே என்றும், ஆடையும், அணியும் போன்ற மேற்புறவணியில் மட்டும் ஆரியம் தழுவினவென்றும், அவ்வாரியமும் (அவை) தமிழைத் தழுவுங்கால் வேண்டாததே என்றும், வடமொழியைத் தமிழல் - திரவிடத்தின் தாயெனக் கூறுவது பெரிதோர் ஏமாற்றாம் என்றும் தெரிந்து கொள்க" என்கிறார். இனி, உயர்மொழி என்பதற்குக் கூறிய மற்றோர் இலக்கணம் அம்மொழி வழங்கும் நாட்டில் உள்ள மொழிகளில் மேதகவுடைமை என்பதாம்.

இதனைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 'சீரிளமைத்திறம்' எனப் பாராட்டுகின்றார். பல மொழிகளைத் தான் தந்த தலைமையொடும் தானும் பெருகிச் சிறந்து இளமை மாறாமல் நின்று விளங்குதல் மேதகவாகும்.

ஏட்டு வழக்காக நிற்கும் இலத்தீனம், கிரீக்கு, வடமொழி என்பன போல் இல்லாமல், உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்குகளும் கொண்டிருத்தலும், பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குதலும், கலைமலி தமிழாகவும் துறைத் தீந்தமிழாகவும் பொலிந்து வருதலும் அதன் உயர்வின் விளக்கமாம். தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி என்னும் இலக்கணம் கால்டு வெலாராலேயே மெய்ப்பிக்கப் பட்டமையை உயர்மொழி என்பதை விளக்கும் போதே கண்டோம்.

வடசொற்கள் தமிழொடு வழங்கத் தொடங்கிய நாளிலேயே,

"வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என ஆசிரியர் தொல்காப்பியர் அரிய மொழிக் காவல் புரிந்தார். அதனைச் சங்கச்சான்றோரும் பிற்சான்றோரும் கட்டிக் காத்தனர். வரவர வடசொற்கலப்புப் பெருகினும் வட எழுத்துக் கலப்பை ஏற்றனர் அல்லர். கல்வெட்டு செப்பேடு ஆயவற்றிலும் உரைநடையிலும் சில வட எழுத்துகள் இடம்பெற்றாலும் செய்யுளில் செறிக்காமல் காத்துவந்தனர். அந்நிலையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தளர்வு உண்டாயிற்று. 'ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?' என்பாரும் மரபு நிலை மாறி நின்றனர். இந்நிலையிலேதான் இயல்பாக மொழித் தூய்மை பேணி வந்த மறைமலையடிகளார் 'தனித் தமிழ் இயக்கம்' கண்டார். ஆரியம் ஆங்கிலம் என்னும் மொழிகளையும் கற்ற மும்மொழிப் புலமையாளராக இருந்தும் அச்சொற்கள் தமிழில் கலவாது பேசுதலும் எழுதுதலும் வேண்டும் என்னும் நோன்பு பூண்டார். அதற்கு முன்னர் இயற்றிய – உரைகண்ட – நூல்களில் அரிதாக இடம் பெற்றிருந்த பிற சொற்களையும் மறுபதிப்பில் இடம் பெறாமல் களைந்தார். தூய தமிழில் பல்வேறு துறைகளில் நூல் எழுத முடியும் என்பதை நிலை நாட்டினார். இதனைப் பாவாணர்,

> தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால்
> உரைநடையும் செய்யுளுமாகிய இருவடிவிலும் பல்துறை தழுவி
> ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி முதலிரு கழக நிலைக்குத்
> தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிர் அளித்தவர் என்றும்
> (வடமொழி வரலாறு பக் 54)

> "மூவா யிரமாண்டு மோது வடமொழியால்
> சாவாம் தகைநின்ற தண்டமிழை – மேவாக்
> குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த அப்பர்
> அமரர் மறைமலை யார்"

என்றும் (மறைமலையடிகள் பல்துறைப்பதிகம்) பாராட்டினார்.

பாவாணரோ ஒரு சொல் தானும் வேற்றுச் சொல் கலவாமல் பேசுதலையும் எழுதுதலையும் நோன்பாகக் கொண்டவர். ஆதலால் அவர்

இயற்றிய நூல்கள் அனைத்தும் தனித்தமிழ்க் களஞ்சியமாக அமைந்ததை அன்றித் தனித் தமிழ்ப் படைக்கலக் கொட்டிலாகவும் காப்பரணமாகவும் திகழலாயின. அவர்கண்ட உலகத் தமிழ்க்கழகம் தனித் தமிழ்ப் பாசறையாகவே விளங்கலாயிற்று.

மறைமலையடிகளார் தோற்றுவித்த தனித் தமிழ் இயக்கப்பணியை மதிப்பிடுகிறார் மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார்.

“மறைமலையடிகளின் தனித் தமிழியக்கம் தமிழ்த்தாயின் நெஞ்சு புரையோடாதும் தமிழர் அறை போகாதும் காத்தது. தமிழின் வயிற்றில் இருந்து முன்பு பல திராவிட மொழிகள் கிளைத்து அதன் பரப்பைச் சுருக்கியது போல, மீண்டும் தமிழகத்துள் ஒரு புதிய திராவிட மொழி பிறந்து தமிழை இன்னும் குன்றிக் குலையாதவாறு தடுத்தது. இன்று பாடநூல்கள் பெரும்பாலும் தமிழ்வடிவாக வருகின்றன. ஒருசார் இளைஞர் கூட்டம் எழுத்தாளர் கூட்டம் குடிநீரைத் தூய நீராகக் காத்தல் போலத் தமிழைத் தூய தமிழாகக் காத்துவருகின்றன. கலப்பு மிகுதியிருந்தாலும் பல செய்தித் தாள்கள் தமிழ்த் தூய்மையையும் முடிந்த அளவு பேணிவருகின்றன. சொற்பொழிவுகள் நல்ல தமிழில் கேட்கப்படுகின்றன. வாழ்த்துக்கள், வரவேற்புக்கள் அழைப்பிதழ்கள் எல்லாம் நல்ல தமிழ்ப்பைங்கூழ் வளரும் பைந்நிலங்களாக மிளிர்கின்றன. இம்மாற்றங்களையெல்லாம் மறைமலையடிகளைப் பெற்றமையால் தமிழ்த்தாய் பெற்றாள். அத்தவமகன் அடிச்சுவட்டை அன்புச் சுவடாகப் போற்றிப் பாலின் தூய்மை போலத் தமிழின் தூய்மையைக் கடைப்பிடித்துவாழும் இளைய மறைமலையடிகள் இன்று பல்கி வருப. ஆதலின் தமிழ், தனித்தடத்தில் செல்லும் புகைவண்டி போலப் பழைய புதிய தன் சொற்களைக் கொண்டே விரைந்து இயங்கி முன்னேறும் என்று உறுதி கொள்வோம் என்கிறார்”. (மறைமலையடிகள் நூற்றாண்டு விழாமலர் *பக்.24)*

உலகமுதல் தாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம் என்பதை எழுதியவர் பாவாணர். தமிழில் முதற்கண் புகுந்த வடமொழியில் காணும்

தமிழ்ச் சொற்களையும் தமிழ் வேர்களையும் 'வடமொழி வரலாற்றில்' நிறுவியவர் பாவாணர். தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு என்பவற்றையும் எழுதியவர் அவர். தமிழே உலக முதன் மொழி. அது தோன்றியது, உலக முதல் மாந்தன் தோன்றிய குமரிக் கண்டத்தில் ஆகும்; தமிழே ஆரியத்தின் மூலமும் திரவிடத்தின் தாயுமாகும் என்னும் கொள்கைகளை நிலைநாட்டியவரும் அவர். ஆதலால் தமிழின் தனித்தன்மையை விளக்காத எழுத்தோ பாட்டோ அவர் வழிப் பிறந்தது இல்லை.

இனித், 'தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?' என்பதொரு சிறு சுவடியும் அவர் வரைந்ததே.

சொற்கடன் பொருட்கடன் எனக் கடன் இருவகைத்து. பொருட்கடன் கோடல் போன்றே சொற்கடன் கோடலும் தேவையும் தேவை இன்மையும் ஆகிய இருநிலைமைகளில் நேர்வதாகும். ஆங்கிலம் போன்ற மொழிகளில் சொல்வள மின்மையால் அவற்றிற்குப் பிறமொழிகளினின்று கடன் கோடல் இன்றியமையாததாயிற்று. தமிழ் பெருவள மொழியா தலின் அதற்குச் சொற்கடன் தேவையில்லை. தமிழில் இதுவரை புகுந்த அல்லது புகுத்தப்பட்ட அயற்சொற் களெல்லாம் அதன் வளத்தைக் குறைத்து அதன் தூய்மை யைக் குலைப் பதற்குக் காரணமாய் இருந்தவையே.

சொல்லும், பொருள்போல் ஒரு செல்வமே...........

பலகணி, சாளரம், காலதர், காற்றுவாரி என்னும் நாற்பழந் தமிழ்ச் சொற்கள் இருப்பவும் அவை வழக்கொழிந்து அவற்றிற்குப் பகரமாக ஜன்னல் என்னும் போர்த்துக்கீசியச் சொல்லே வழங்கி வருகின்றது.

அடுக்களை, அட்டில், ஆக்குப்புரை (கொட்டகை) சமையலறை, மடைப்பள்ளி (அரண்மனை, கோயில், மடங்களில் உள்ளது) முதலிய பல முத்தமிழ்ச்சொற்கள் இருப்பினும் அவற்றுள் முதலிரண்டும் வழக்கு வீழ்ந்து ஏனையவும் வீழுமாறு 'குசினி' என்னும் ஆங்கிலச் சொல் வழங்கி வருகின்றது.... வேண்டாதும் வரைதுறையின்றியும் வழங்கிய வட

சொற்களால் வழக்கு வீழ்த்தப்பட்ட தென் சொற்கள் எண்ணிறந்தன என அறுபதுக்கு மேற்பட்ட சொற்களை எடுத்துக் காட்டுகிறார். உருதுச் சொல் ஆங்கிலச் சொல் முதலியவற்றையும் சுட்டுகிறார். பிறசொற்களை ஆளுதலால் ஏற்படும் தீமைகளைப் பலபடையாகக் குறிக்கிறார்.

'திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி' செம்மொழி என்பதைப் பற்றி எண்ணலாம்.

இசைத் தமிழ்க் கலம்பகத்தில் ஒருபாட்டு 'தமிழின் பதினாறு தன்மை' என்பது. அது,

தொன்மையொடு முன்மை
தென்மையொடு நன்மை
தாய்மையொடு தூய்மை
தழுவிளமை வளமை

எண்மையொடும் ஒண்மை
இனிமையொடும் தனிமை
செம்மையொடு மும்மை
திருமையொடும் அருமை

இங்கண்பதி னாறு
இலகும் தமிழ்க் கூறு
எங்குமேயிவ் வாறு
எடுத்துமிகக் கூறு"

என்பது (14)

திருந்திய பண்புடைமை கொண்டே தமிழ் முதன்முதலாகப் பெற்றது செம்மை அடையே ஆகும். செந்தமிழ் என்பது தொல்காப்பியர் வழங்கியது. அச்செம்மையே நூற்றாண்டு அளவில் மாறிப் போகாமலும், வழக்கொழிந்து போகாமலும் காக்கின்றதாம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூற்பாக்களையும், பாடல்களையும் பயின்ற - கேட்ட – அளவில் பொருள் மயக்கமோ திரிபோ இல்லாமல் அறிய வாய்ப்பது இத்திருந்திய பண்பாம் செம்மையாலேயேயாம்.

இன்ன எழுத்து முதலாகும் இன்ன எழுத்து இடையாகும் இன்ன எழுத்து நடையாகும் எனச் சொல்லில் நிற்கும் எழுத்து நிலை என்ன.

இவ்வெழுத்தின் பக்கல் இவ்வெழுத்தோடும், இவ்வெழுத்தின்பின் இவ்வெழுத்து வாராது என்னும் நிலை என்ன,

இன்னபொருள் உணர்த்த இன்ன ஓசைச்சொல் வருதல் வேண்டும் வரம்பு என்ன,

இடைச்சொற்கள் தாமும் இவ்விவ்விடத்து இவ்விப்பொருள் விளக்கும் வகையாலேயே வரும் என்னும் தெளிவு என்ன,

புணர்நிலை, அளபெடை நிலை, குறுக்கநிலை, பொருள்கோள் நிலை என்பவற்றின் விரிவு என்ன,

நூல்வகை, உரைவகை, செய்யுள் வகை, வனப்பு வகை, வண்ண வகை, உத்திவகை, அகம் புறம் ஆகிய பொருள்வகை என்னும் விரிவாக்கம் என்ன,

குறிப்பு, எச்சம், பாட்டு, நோக்கு, தொகுநிலை, பகுநிலை என்னும் விளக்க நிலை என்ன,

இவற்றையெல்லாம் அமைய வேண்டும் வகையால், அமைத்து வைத்த சீர்மை என்ன, இவையெல்லாம் செந்தமிழின் திருந்திய பண்பின் சீர்த்த நாகரிக நிலை விளக்கமேயாம்.

இடக்கரக்கு, மங்கலமொழி, அவையல்கிளவி, உள்ளுறை, இறைச்சி என்பனவெல்லாம் சீர்த்த நாகரிகச் செவ்வியல்கள் அல்லவோ!

தமிழ்மொழியின் மும்மைப் பகுப்பும், முப்பால் நயமும், ஆற்றுப்படை அமைவும், வாயுறை வாழ்த்து முதலாம் நலமும், இலக்கிய வகைப் பெருக்கமும், காலந்தோறும் வளரும் புத்தாக்கக் கலைச் சொல்லாக்கமும் மொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவாய் அல்லவோ காட்சியளிக்கின்றது.

தன் சொல்லாலேயே அறிவியல் உரைப்பன, வரலாறு இயம்புவன, கலை வளம் துறைவளம் கொழிப்பன தமிழ்ச்சொற்கள் எனின் அதன் திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் செறிந்தமையால்தானே.

(எ-டு) உல் - உலம் = உருண்டைக்கல். உலம் கலந்த தோள் - சிந். இளவட்டக்கல். உலம் > உலை > உலைக்கல் = உருண்டை

வடிவிலான பட்டடைக்கல். உல் > உலம் > உலண்டு = உருண்டை வடிவிலான ஒரு பூச்சிக்கூடு

உல் > உலவு > உலா = சுற்றிவருதல், உலா, உலாப்புறம் நூல்.

உலா > உலாம் > உலாவும் = சுற்றிவருதல், உலாவுதல்.

உலகம் = உருண்டை வடிவினது; சுழன்று வருவது.

வை - நெல். 'வைத்தூறு' - திருக்குறள்

'வைக்கோல்'

வை - பாதுகாப்பாக இருக்கச் செய்தல்

வையம் - இயங்கும் வண்டி.

வையகம், வைப்புழி - உலகம். உயிர்களின் நுகர்வுக்கு உரியவையாம். வளங்களை யெல்லாம் வைத்திருப்பது. நீர், எண்ணெய், பொன்,வயிரம் இன்னவை வைத்திருப்பது.

பாழ் - வெற்றிடம், வானம் 'வளியிடை வழங்கா வானம்'

நாள் > நாள்மீன் = தன்னொளியுடையது

கோள் > கோள்மீன்: தன்னொளியுடையவற்றில் இருந்து ஒளியைக் கொண்டு ஒளிர்வது.

-இவை அறிவியல் அல்லவா

எலி = எல் + இ = ஒளியுடையது

'எல்லே இலக்கம்' - தொல்; அல்லங்காடி, எல்லங்காடி - சிலம்பு. வெண்ணிறமாக இருந்ததால் அவ்வுயிரி எலி எனப்பட்டது

பின்னே கருநிறமும் தோன்றியமையால் எலியில் இருந்து விலக்கிக் காட்டக் காரெலி என்றனர்.

கரும்பு - கருநிறப்பயிர்.

அதில், வெள்ளை, இராமம் என்பவை தோன்றலால் வெள்ளைக்கரும்பு, இராமக் கரும்பு என்பவை தோன்றின சுவைக்க ஆகாத நச்சுக் கரும்பு, பேய்க்கரும்பு எனப்பட்டது

பே என்பது அச்சப் பொருளது (தொல்)

பேஎ முதிர் குன்றம் = அச்சம் தரும் மலை

பே - பேய்

-இன்னவை வரலாறு உரைப்பன.

செயல் என்பது செம்மை வழிப்பிறந்த சொல். செய் >செய்கை; செய்யன். செய் - செம்மை. செம்மையாகச் செய்வதே செயல், நன்செய், புன்செய்.

தொழில் என்பது தொழு அடியாகப் பிறந்த சொல்.

வணங்குதற்கு இடமாகியது தொழில்; செய்யும் தொழிலைத் தெய்வக் கடமை எனச் செய்தல், தொழுதல் நடைமுறை வழக்கமாதலை ஒவ்வொரு தொழிலோரிடமும் காணலாம். வணங்குதல் – வளைதல் பொருளது. வில்வணக்கம், சொல்வணக்கம் - இவை வள்ளுவம்.

ஆள் - ஆளுமை. எட்டு ஆள் வேலை.

ஆண், பெண், சிறுவர் அனைவரும் ஆளே; ஆளுமையுடையரே என்னும் ஒப்புரிமைச் சொல். ஆள் - ஆளி - ஆள்பவன், ஆள்பவள் - இன்னவை பண்பாடு நாகரிக விளக்கமாய் அமைவன. உயிர், மெய், உயிர்மெய் என்னும் குறியீடுகள் மெய்ப்பொருள் தேர்ச்சி காட்டுவன.

இயவுள், கடவுள், இறை, பகவு இன்னவை இறைமை யாய்வின் சீர்த்தி உரைக்கும் சொற்கள்.

காளி, மாரி, முருகு, சிவம், சேயோன், மாயோன், கொற்றவை இன்னவை இயற்கை வழிப்பட்ட இறைமைப் பெயர்கள்.

நலம் - கப்பல் என்பதற்குரிய பெயர்களை எண்ணின், தமிழர் கடலாண்ட சீர்மையும் நாடு கண்ட வணிகமும் புலனாம்.

இன்னவற்றால் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி யாகும் செவ்வியல் மொழி என்பது விளக்கமாம். அது தனக்கு மட்டுமே உரிய அத்தகுதியை அடையாமை, தமிழர் தகுதியில்லாமை அன்றி அதன் தகுதி இல்லாமை அன்றாம்.

# சங்கத் தமிழரின் வாழ்வியல் கூறுகள்

சு.கு. பன்னீர்செல்வம்

தமிழகத்து வரலாற்றிற்குட்பட்ட காலம் சங்க காலம். தமிழ் மக்கள் தாம் பேசிய மொழியுடன் இணைந்து வாழ்ந்தனர். தமிழ் வேறு, தமிழர் வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு அம்மொழியானது தமிழரின் வாழ்வில் இடங்கொண்டது. தமிழ் நிலத்தின் உயிர் நாடி தமிழ் மக்கள்; தமிழ் மக்களின் உயிர் நாடி தமிழ்மொழியாகும். தமிழைப் போற்றி வளர்ப்பதும், தமிழ்ப் புலவரைப் பாராட்டிப் புகழ்ந்து வருவதுமே தமிழ் மன்னரின் முதற்கடமையாக இருந்து வந்தது. கோடி கொடுத்தும் புலவர் ஒருவரின் பாராட்டைப் பெறுவதற்கு மன்னர்கள் ஆவலாக இருந்தனர்.

சங்க கால மன்னர்கள் எழுப்பிய எழிலோங்கு அரண்மனைகள், மாளிகைகள், அங்காடிகள், கோயில்கள், துறைமுகங்கள், பந்தர்கள், அவர்கள் ஓட்டிய நாவாய்கள் அனைத்தும் இப்போது மறைந்து விட்டன. ஆனால், அவர்கள் காலத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் பல இப்போதும் எஞ்சி நிற்கின்றன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண் கீழ்க்கணக்கும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பழந்தமிழரின் சால்பை விளக்கிக் காட்டுகின்றன.

மொழிக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். இலக்கண விதிமுறைகள் பகுப்பதற்கு முன்னர் அவ்வாழ்க்கை நன்கு வளர்ச்சியும் வளமும் பெற்றிருக்க வேண்டும். வளர்ச்சி பெற்று நிலைத்து வாழும் சமூகத்துக்குத்தான் ஒழுங்கு விதிகள் தேவைப்படும். ஒழுக்க முறைகளை வகுத்து அவற்றின்படியே மக்கள் வாழ வேண்டுமென்று விதிப்பது இயற்கைக்கு முரணாகும். எனவே, தமிழில் பொருளிலக்கணம் ஒன்று தோன்றுவதற்கு முன்பே மக்கள் அதில் வகுத்த வாழ்க்கையை வாழ்ந்து

வந்தனர் என்பதில் ஐயமில்லை. நிலத்தின் இயல்பிற்கேற்ப மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது பண்டைத் தமிழரின் கொள்கையாகும்.

ஐவகையாக நிலத்தினைப் பாகுபடுத்தினர். இப்பாகுபாடுகளுக்குத் திணைகள் என்று பெயர். இங்குத் திணை என்பதற்குக் குடி என்று பொருள். நிலத்தைப் பாகுபாடு செய்ததைப் போலவே காலத்தையும் சிறுபொழுது, பெரும்பொழுது என்று இருவகையாப் பிரித்தனர். தட்பவெட்ப மாறுபாடுகளைக் காட்டிய கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் இவற்றுடன் இணைந்த நொடி, நாழிகை, நாள், கிழமை, திங்கள், ஆண்டு இவற்றைப் பெரும்பொழுதுகள் எனவும், காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை ஆகியவற்றை சிறுபொழுதுகள் எனவும் பாகுபடுத்தினர். உலக அமைப்பை முதல், கரு, உரி என மூன்றாக வகுத்து, உலகில் வாழும் மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என்றும் பகுத்து அதை இயற்கையுடன் இயைபுறுத்தியது பண்டையத் தமிழரின் சிறந்த பண்பாடாகும்.

## அகம்

பழந்தமிழர் இல்லற வாழ்க்கையையே பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பதைக் கொள்கையாகவே கொண்டிருந்தனர். இதனாலேயே வள்ளுவரும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலை மட்டும் பாடினார். வீட்டைப் பற்றிப் பாடினாரில்லை. சங்க இலக்கியங்கள் பெரும்பாலானவை அகப்பொருளையே பேசுகின்றன. பலவகையிலும், ஒத்த நலன்களை உடைய ஒருவனும், ஒருத்தியும் கூடுங்காலத்துப் பிறப்பது இன்பம். அதனை இன்னதென்று சொற்களால் விளக்க முடியாது. அவர்களது அகத்தால் மட்டும் உணர முடியும். அத்தகைய இன்பம் அகம் எனப்பட்டது. ஆண் பெண் விருப்பத்தினால் அகத்திணை உண்டாகின்றது.

மண், பொன், பசி போன்றதினால் புறத்திணை உண்டாகிறது. மணப்பருவம் எய்திய இருபாலர் தாமாகக் கூடுதலுக்குக் 'களவு' என்று பெயர். பிறர்க்கு உரித்தான ஒரு பொருளை அவரறியாதவாறு கவர்ந்து கொள்வது களவு எனப்படும். பழந்தமிழர் ஊழின் பெருவலியில் நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே, காதலர்கள் ஒன்று கூடுவதற்கே அவர்களை ஊழ் கூட்டுவிக்க வேண்டும் என்று கருதினர். காதலர் இருவர் ஒருவரை ஒருவர் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்து விடுவாராயின், மீண்டும் அவர்கள் வேறு யாரையும் காதலிப்பதில்லை. அகப்பொருளிலக்கணத்தில் காதலன் காதலியை, தலைவன் தலைவி என அழைப்பது மரபாகும்.

தமது காதல் முற்றுப் பெறுவதற்கு இடையூறுகள் நேருமாயின் தலைவனும் தலைவியும் ஊரைவிட்டே வெளியேறி விடுவதுமுண்டு[1]. 'இந்த உலகத்தையே நான் உனக்கு ஈடாகப் பெற்றாலும் உனைக் கைவிடேன்' என்றும்[2] 'தலைவி தரும் வேப்பங்காயும் வெல்லக்கட்டியாக மகிழ்ந்துண்பேன்'[3] எனத் தலைவன் கூறுவதும் தலைவி மீதுள்ள பற்றைப் பறைசாற்றும். அகத்திணையுள் திருமண வாழ்க்கை 'கற்பு' எனப்படும். திருமணம் தீயகோள்கள் இடம்விட்டு விலகி, நிலா உரோகிணியுடன் கூடும் ஒரு நல்ல நாளில் விடியற் காலையில் நடைபெறும். மாலைகளால் அலங்கரித்த மணப்பந்தலில் புதுமணல் பரப்பி விளக்குகளால் அலங்கரிப்பர். வயது முதிர்ந்த மங்கல மகளிர் குடங்களில் தண்ணீரை முகந்து வந்து 'சிறு மண்டை' என்னும் அகன்ற வாயுடைய கலத்தில் பெய்து கொடுப்பர். குழந்தைகளைப் பெற்றெடுத்த மங்கல மகளிர் நால்வர் கூடி அந்தத் தண்ணீரில் பூவிதழ்களையும், நெல்மணிகளையும் சொரிந்து அத்தண்ணீரினால் மணமக்களை நீராட்டும் இச்சடங்கு 'வதுவை நன்மணம்' என்று பெயர். உளுத்தம் பருப்புடன் கலந்த அரிசிப் பொங்கல் மணவிழாவிற்கு வந்தவர்களுக்கு வழங்கப்படும். இறைச்சியும் நெய்யும் கூட்டி ஆக்கிய வெண்சோற்றையும் வழங்குவதுண்டு[4] திருமண வினைகள் தொடங்குமுன் கடவுள் வழிபாடு நடைபெறும், மணமுழவு முழங்கும். வெண்மையான நூலில் வாகையிலைகளையும், அருகம்புற் கிழங்குகளையும் கோத்த மாலையை மணமகள் அணிந்து கொள்வாள்.

மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டியதாகச் சங்கத்தமிழில் சான்றுகள் ஏதுமில்லை. 'ஈகையறிய இழையணி மகளிரொடு' - அதாவது பிறர்க்குக் கொடுப்பதற்கரிய இழை - என்று புறப்பாடல் ஒன்றில் குறிப்புக் காணப்பட்டாலும் அது திருமணத்தின் போது அணிவிக்கப் பட்டதென்பதற்குச் சான்றில்லை. பண்டைத் தமிழர் மாங்கல்ய நாண் பூட்டித் திருமணம் முடித்தனர் என்று உறுதிபடக் கூறுவதற்கில்லை. ஆண்டாள், கண்ணன் தம்மை மணந்ததாகக் கண்ட கனவைத் தன் தோழியிடம் கூறும்போது திருமணச் சடங்குகள் அத்தனையும் கூறுகிறாள். அப்போது கூடக் கண்ணன் தமக்குத் தாலி கட்டியதாகக் கூறவில்லை.

"மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்"

என்று மட்டும்தான் கூறுகிறாள்.

கந்த புராணம், பெரிய புராணம் ஆகியவற்றில் குறிப்பிடும் திருமணங்களிலும் மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டியதாகத் தெரியவில்லை. சீவக சிந்தாமணியில் அரசியர் அணிந்திருந்த 'நாணுள்ளிட்டுச் சுடர்வீச நன்மாணிக்க நறுதாலி' யும் திருமணத்தின் போது கட்டப்பட்டதென்று கொள்வதற்குச் சான்றில்லை[5].

பெண்ணின் கற்பைப் போற்றி வந்தனர் பழந்தமிழர்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்'[6]

'புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை'[7]

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'[8]

- எனக் கற்புடைய மனைவியைத் தவிர்த்து ஒருவன் பெரும்பேறு வேறொன்றுமில்லை என்று கருதினர்.

கற்பு என்னும் ஒழுக்கம் ஆண்களுக்கும் உரிய பண்பாகவே அந்நாளில் கருதப்பட்டது. எனினும் பழந்தமிழர் சமுதாயத்தில் ஆண்களின் கற்பு நிலையை மன்னனோ, புலவர்களோ, அறமோ வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. கணவன் தன்னைப் பிரிந்து சென்றால் மனைவிக்கு ஊடல் ஏற்படுவதுண்டு. தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகியோர்கள் இவ்வூடலைத் தீர்த்து வைப்பர். மணமான பிறகு கணவன் மேலும் கல்வி கற்பதற்கோ பொருளீட்டுவதற்கோ பிரிவதுண்டு. பிரிவின் போது மனைவி உடன் செல்வதில்லை. கல்வி கற்க மூன்றாண்டுகளுக்குள் பிரிவு இருத்தல் வேண்டும். மன்னனுடைய கடமைகளுக்கோ அல்லது பொருள் தேடவோ செல்லும் கணவன் தன் மனைவியை விட்டு ஓராண்டுக்கு மேல் பிரிவை நீடிக்கக் கூடாது.[9]

தான் விரும்பிய ஒரு பெண்ணை மணக்க வாய்க்காத ஆண்மகன் பனங்கருக்கினால் குதிரை செய்து அதன்மேல் ஏறி அமர்ந்து தெருவில் வருவதுண்டு. இது மடலேறுதல் ஆகும். பனங்கருக்கினால் அறுப்புண்ட அவன் உடலிலிருந்து வடியும் உதிரத்தைக் கண்ட ஊராரும், பெண்ணின் பெற்றோரும், அவன் துயரைக் கண்டு இரக்கம் கொண்டு அப்பெண்ணை அவனுக்கே மணமுடிப்பர்.[10] பெண்கள் மடலேறும் வழக்கமில்லை. இல்லறத்தில் நின்று இல்வாழ்க்கையின் கடமைகளையாற்றும் உரிமை கணவனுடன் சேர்ந்து வாழும் பெண்களுக்கு மட்டும் உண்டு. தன் கணவன் பொருளீட்டுவதற்கோ, பரத்தையுடன் கூடி வாழும்போதோ கற்புடைய ஒருத்தி, ‘அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும், விருந்தினர் எதிர்கோடலும்’ ஆகிய இல்லற உரிமைகளை இழந்து நிற்பாள்[11] தன்னை அப்போதெல்லாம் ஒப்பனை செய்து கொள்ளும் வழக்கமுமில்லை. பெண்கள் பூப்புற்றிருக்கும் நாட்களில் வீட்டுப்பாண்டங்களைத் தொடாமலிருப்பர். இவர்கள் ‘கலந்தொடாமகளிர்’ எனப்படுவர். மக்களைப் பெறாதார்க்கு இவ்வுலகில் பயன்படும் பொருள் ஒன்றுமில்லை எனப் புறப்பாடல் கூறுகிறது.[12] மக்களைப் பெறுவது தாயின் கடன் என்றும், அக்குழந்தைக்குக் கல்வி பயிற்றியும், அறிஞர்களின்

அவையில் முன்னிறுத்தும் தகுதியைக் கொடுத்தும் அவனுக்குச் சான்றோன் எனப் பாராட்டுக் கிடைக்கச் செய்வதும் தந்தையின் கடன் எனவும் கூறப்பட்டது.[13]

கணவனை இழந்த பெண் அக்காலத்தில் உடன் கட்டை ஏறும் பழக்கம் இருந்தது.[14] கைம்பெண்கள் நெய்யுண்பதில்லை. தண்ணீர்ச்சோற்றைப் பிழிந்து எடுத்து அதனுடன் அரைத்த எள்ளையும் புளியையுங் கூட்டி வெந்த வேளைக் கீரையுடன் உண்ணுவர். பாய்மேல் படுக்காது வெறுந்தரையில் படுத்து உறங்கினர். ஒப்பனைகளை இவர்கள் கொண்டதில்லை.

**உணவு**

அரிசிச்சோற்றையே பண்டையத் தமிழர் தம் சிறப்புணவாகக் கொண்டனர். வெளுக்கத் தீட்டியே அரியை உலையிலிடுவர்.[15] வரகையும் சாமையையும் சமைத்துண்பர்.[16] தமிழகத்தில் பலவகையான நெல் விளைந்தது. சோற்றோடு காய்கறிவகைகளையும் அட்டு உண்பர். மாங்கனியைப் பிழிந்து சாறு எடுத்து, அதைப் புளிக்க வைத்து அதைப் புளியாகப் பயன்படுத்துவதுமுண்டு. இவையன்றிக் களாப்பழப்புளி, துடரிப்புளி, நாவற்பழப்புளி ஆகியவும் பயன்படுவதுண்டு.[17] வடுமாங்காய் ஊறுகாய், அக்காலத்திலேயே உண்டு.[18] பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, சேம்பிலைக்கறி, வள்ளிக்கிழங்கு, சுட்ட பனங்கிழங்கு ஆகியவையும் பழந்தமிழரின் உணவாகும். அரிசி, கொள்ளுப்பருப்பு, பயிற்றம்பருப்பு ஆகியவற்றைப் பாலில் கூட்டிக் கஞ்சி காய்ச்சிக் குடிப்பார்கள்.[19] பாலைத்தோய்த்து வெண்ணெய் திரட்டும் வழக்கம் அந்நாளிலேயே இருந்து வந்தது. வெண்ணெய்யை பதமாகக் காய்ச்சி நெய் எடுத்துச் சோற்றில் வார்த்து உண்பார்கள். ஊன் உணவு வழக்கம் பரவியிருந்தது. பார்ப்பனரும் ஊன் உண்டதற்குச் சான்றுகள் உண்டு.[20] வெள்ளாடு, செம்மறியாடு, மான், முயல், ஆமை, மீன் வகைகள், நண்டு, ஈயல், கோழி, காடை, உடும்பு முதலியவற்றின் இறைச்சியைத் தனியாகவோ, பாலும் அரிசியுங் கூட்டியோ சமைப்பர்.

நெல்லை இடித்து ஆண் பன்றிக்குத் தீனியாகக் கொடுத்து அதைக் கொழுக்க வைப்பார்கள். அதைப் பெண் பன்றியுடன் சேரவிடாமல் தனியாகக் குழியில் விட்டு வளர்த்துப் பிறகு அதைக் கொன்று அதன் ஊனைச் சமைத்துண்பர்.[21] ஊனை உப்புக் கண்டம் போடுவதுமுண்டு.[22]

பாரியின் நண்பரான கபிலர் பார்ப்பன வகுப்பைச் சார்ந்தவர். இவர் ஊன், மது ஆகியவற்றை நீக்காமல் அருந்தினார் என்று தெரிகிறது.[23] கள்ளுண்ணும் வழக்கம் பழந்தமிழகத்தில் மிகவும் பரவலாகக் காணப்பட்டது. மன்னர், புலவர், பாணர், கூத்தர், பொருநர், விறலியர் அனைவருமே மதுவுண்டு களித்தனர். இயற்கையாகக் கிடைத்த பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள் ஆகியவற்றையும், யவனர்கள் கப்பலில் கொண்டு வந்த தேறலையும் அவர்கள் குடித்தனர்.[24] தேறலின் சுவையையும், அது கொடுக்கும் வெறியையும் தூண்டுவதற்காக மது வகைகளை மூங்கிற்குழாய்களில் நிரப்பி நெடுநாள் மண்ணில் புதைத்து வைப்பர்.[25] அத்தகைய மது வகைகளின் வெறி மிகவும் கடுமையாக இருக்கும். அக்கடுமையைப் பாம்பின் கடிக்கும், தேளின் கொட்டுக்கும் புலவர்கள் ஒப்பிட்டுள்ளனர்.[26] யவனர் இரட்டைப்பிடிச் சாடிகளில் மரக்கலவழிக் கொணர்ந்த மதுவைத் தமிழர் உண்டு வந்ததற்கான சான்றுகள் அரிக்கமேட்டுப் புதைகுழிகளில் கிடைத்துள்ளன. சங்க காலத்தின் இறுதியில் தமிழ் மக்களிடையே குடிப்பழக்கம் வரையறை மீறிக் காணப்பட்டது. காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற பெரிய நகரங்களில் வாழ்ந்திருந்த குடிமக்கள் இத்தீய பழக்கத்தில் மூழ்கிக்கிடந்தனர். வரையறையற்ற சிற்றின்பமும் கட்குடியும் ஒரு நாட்டின் மக்களை இழிந்த நிலைக்கு ஈர்த்துவிடும் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். ஒழுக்கத்திற்கு முரணான சிற்றின்ப விழைவும், கட்குடியும் எத்துணைத் தீயபழக்கங்கள் என்பதைக் காட்டவும், இவ்விரண்டும் தம் காலத்துத் தமிழ் மக்களைப் பெரிதும் ஈர்த்துவிட்டதைக் கடியவுமே வள்ளுவர் ‘வரைவின் மகளிர்,’ ‘கள்ளுண்ணாமை’ என்னும் ஈரதிகாரங்களைத் திருக்குறளில் அடுத்தடுத்து வைத்துள்ளார்.

பரத்தையர் ஏழிசையாழை வாசிக்கும் இன்னிசைக்கலையில் சிறந்திருந்தனர். புறமண்டலத்தாரும், உள்ளூரிலுமாய்த் தம் வடிவழகை விரும்பி வரும் இளைஞராகிய செல்வர் பலரை விரும்பிச்சேர்வர். முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியால் குலைந்த ஒப்பனையை சீர்செய்துகொள்வர். ஆண் மக்களுடைய மனைவிட்டுப்பிரிதல் நிகழ்ச்சியில் 'பரத்தையர் பிரிவும்' ஒன்று என்றும்,

'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே;
நிலத்திரிவு இன்று அஃது' (தொல்,பொருள் :28)

என்றும் தொல்காப்பியர் கூறுவதாலும் இவ்வொழுக்கம் தீமையுடையதாக அந்நாளில் கடியப்படவில்லை என்பது தெளிவு.

உடை:

பண்டைத்தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் பூவையும், தாழையையும் கோர்த்து ஆடையாக அணிவது வழக்கம்.[27] நகர மக்கள் பஞ்சாலும், பட்டாலும், ஒருவகை மலையெலி மயிராலும், வேறுசில விலங்குகளின் மயிராலும் ஆடைகள் நெய்தார்கள்.[28] துணிகள் மிக மிக நுண்ணிய நூல்களினால் நெய்யப்பட்டன. அவற்றுள் தனித்தனி இழைகள் கண்ணுக்குப் புலப்படா. புகையைப் போலவும், பாலாவியைப் போலவும், பாம்பின் தோலைப் போலவும், மூங்கிலின் உரியைப் போலவும் துணிகள் நெய்யப்பட்டன.[29] உயர்குடியில் பிறந்த ஆண்மக்கள் மட்டும் இடையில் வேட்டியுடன் சட்டையை அணிவதுண்டு. மன்னர்கள் அணியும் சட்டைக்குக் 'கஞ்சுகம்' என்று பெயர்.[30] பெண்கள் இடையில் புடவையை அணிந்து வந்தனர். தம் மார்பகத்தை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. சந்தனத்தால் தொய்யில் எழுதியும் மலர்களை அணிந்துமே மார்பை மறைப்பர்.[31] பெண் மக்கள் தம் இடையில் மேகலையணிந்து அதன்மேல் பூந்துகில் சுற்றிக்கொள்வர்.[32] வெண்ணிறப் புடவைகளை அணிந்து பந்தாடுவது வழக்கம். செக்கர்வானைப் போன்ற செவ்வண்ணமூட்டிய, பூவேலை செய்யப்பட்ட, மிக மிக நுண்ணிய புடவைகள் மதுரையின் அங்காடிகளில் விற்பனையாயின.[33]

**அணிகலன்கள்:**

மகளிர் பல்வேறு அணிகலன்களால் தம்மை ஒப்பனை செய்து கொண்டனர். அன்றைய தமிழகத்தில் பொன்னும் மணியும் மலிந்துகிடந்தன. முத்தும், பவழமும் இழைத்துப் பலவகையான அணிகள் செய்யப்பட்டன. கால் விரல் மோதிரம், பரியகம், நூபுரம், அரியகம், பாடகம், சதங்கை, குறங்குசெறி, அரையில் அணியும் முத்துவடம், முப்பத்திரண்டு வடத்தாலான முத்துமேகலை, மாணிக்கமும் முத்தும் இழைத்த தோள் வளையல்கள், செம்லியன் வளை, நவமணிவளை, சங்கவளை, பவழவளை போன்ற அணிகளை மகளிர் அணிந்தனர்.[34]

அரி நெல்லிக்காய் மணிமாலை, வலம்புரிச்சங்கு, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி ஆகிய அணிகலன்களையும் பெண்கள் அணிவதுண்டு.[35] இடையில் அணிந்த பட்டிவகையான மேகலை, காஞ்சி, கலயம், பருமம், விரிசிகை என ஐவகைப்பட்டிருந்தது. குழந்தை அணிகலன்களின் வகைக்குக் கணக்கேயில்லை.[36] மணியும் பவழமும் கோத்த அரைஞாண் இடையில் அணிவிக்கப்பட்டது. நெல்லைத் தின்ன வந்த கோழிகளின் மேல் பெண்கள் தம் குழைகளைக் கழற்றி எறிவார்களாம்.[37] அக்காலத்தில் குழைகள் அவ்வளவு மலிந்திருந்தன. தலைக்கோலம் செய்துகொள்வதில் பழந்தமிழ்ப் பெண்கள் அளவுகடந்த விருப்பத்தைக் காட்டி வந்தனர். ஒப்பனைக்கலை வியப்பூட்டும் அளவுக்கு ஓங்கி வளர்ந்திருந்தது. கறுத்து, நீண்டு, நெளிந்த கூந்தலையே மிகவும் விரும்பி வளர்த்தனர்.[38] கொண்டை, குழல், பனிச்சை, சுருள்,முடி என ஐந்து வகையாகத் தலைக்கோலம் செய்துகொண்டனர்.[39] ஆடவரும் தலைமயிரை வளர்த்து அதைச் சுருட்டிப் பின்புறம் முடிந்திருந்தனர்.[40] பார்ப்பனச் சிறுவரும் குடுமி வைத்துக்கொள்வர்.

**உறையுள்:**

சிறு சிறு குடிசைகளில் குடியிருந்தனர். இக்குடிசைகளுக்குக் குரம்பை என்று பெயர். வீடுகள் புல்லாலும், வைக்கோலாலும் வேயப்பட்டன.[41] வரகுவைக்கோல், செந்நெல் கதிர், கரும்பு, கூவையிலை

ஆகியவற்றாலும் குடிசைகள் வேயப்பட்டன[42] நகரங்களை மிகப்பெரிய மாடி வீடுகள் அணி செய்தன. இவை சுட்ட செங்கற்களால் எழுப்பப்பட்டவை. இவை மண்டபம், கூடம், தாயக்கட்டு, அடுக்களை எனத் தனித்தனிப் பகுதிகளாக அமைக்கப்பட்டிருந்தன.[43] அரண்மனைகளின் கூரைகட்குப் பொற்றகடு வேய்ந்திருந்தனர். இவ்வரண்மனைகளின் வாயில்கள் மிகவும் உயரமானவை; குறுகியதொரு மலைக்கணவாய் போலக் காட்சியளித்தன. வெற்றிக்கொடியை உயர்த்திக்கொண்டு வீரர்கள் யானைகளின் மேல் அமர்ந்து அவ்வாயில்களின் வழியே செல்வர்.[44] கைவல் கம்மியர் சிற்பநூல் முறைப்படியே மனைகளையும், நகரங்களையும் வகுத்துக்கொடுத்தனர்.[45] அரண்மனைகளைப் போலவே வீடுகளுக்கும் சாளரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. கதவுகளை மூடிக் குறுக்கே கணையமரம் ஒன்றைப் பூட்டுவார்கள்.[46] இதற்கு 'நூகம்' என்று பெயர். வீட்டு வாசலில் மேடைகள் போடப்பட்டிருந்தன. அவற்றிற்கு வேதிகைகள் என்று பெயர்.[47] வீட்டின் தரையைப் பசுவின் சாணத்தால் மெழுகுவதுண்டு.[48] பார்ப்பனரின் வீடுகளில் கோழிகளையும், நாய்களையும் நுழைய விடுவதில்லை.[49]

**வணிகம்:**

பழங்காலத்தில் நடைபெற்ற வணிகவளத்தைப்பற்றிய சான்றுகள் சங்க இலக்கியத்திலும் அயல்நாட்டு வரலாற்றுக் குறிப்புகளிலும் எண்ணற்றவை உண்டு. பழந்தமிழரின் தொழில்களுள் வேளாண்மையும் வணிகமும் செழித்தோங்கியிருந்தன. புலவர்களும் வணிகம் செய்தனர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார், மதுரை பண்டவாணிகன் இளந்தேவனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், உறையூர் இளம்பொன் வணிகனார், ஓதலாந்தையார், கணியன் பூங்குன்றனார் முதலியோர் சங்க காலத்தில் வாணிகம் செய்த சில புலவர்கள்.

**தொழில்:**

வேள்வி செய்யாத பார்ப்பனர் சங்கு அறுத்தல் முதலிய

தொழில்களிலும் ஈடுபட்டிருந்தனர்.[50] ஓவியத்திற்கான வண்ணக்குழம்பு பூசுவோரும், பட்டும் பவழமும், சந்தனமும், அகிலும், முத்தும், மணியும் விற்பவர்களும், நெல், புல்லரிசி, வரகு, தினை, சாமை, மூங்கிலரிசி வணிகரும், கள் விற்கும் பெண்களும், மீன் விற்கும் பரதவரும், உப்பு விற்கும் உமணரும், எண்ணெய் வணிகரும், தச்சர், ஓவியர், சிற்பிகள், பொற்கொல்லர், தோலுறை தைப்போர் முதலியோரும், பூங்கொத்துகள், வாடாமாலைகள், பொய்க்கொண்டைகள் ஆகியவற்றைச் செய்வோர்களும் பூம்புகார் மருவூர்ப்பாக்கத்தில் திரண்டிருந்தனர்.[51] பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே வாணிகம் நடைபெற்று வந்தது. தேன், நெய், கிழங்கு ஆகிய பண்டங்கள் மீனுக்கும் நறவுக்கும் மாற்றப்பட்டன. கரும்பும் அவலும், மான் ஊனுக்கும் கள்ளுக்கும் மாற்றப்பட்டன.[52] சில பொருள்களை உற்பத்தியான இடத்திலேயும் சிலவற்றை ஊர்ஊராக வண்டிகளிலும் கழுதைகளின் மீதும் ஏற்றிச் சென்று விற்பதுண்டு.[53] வணிகர்கள் கூட்டங்கூட்டமாகக் கூடித் தம் பண்டங்களைப் பல ஊர்களுக்கும் விற்பனைக்கு எடுத்துச் செல்வர். இக்குழுக்களுக்கு வாணிகச் சாத்துகள் என்று பெயர். ஆறலைக் கள்வருக்கும் அஞ்சி அவர்கள் சாத்துகளாகக் கூடிச்செல்வது வழக்கம்.[54] சங்ககால வணிகத்தில் 'காணம்' என்ற பொற்காசு வழக்கத்தில் இருந்தது. தகடூர்ப் போரில் வெற்றி பெற்ற பெருஞ்சேரல் இரும்பொறை தன் வெற்றியைப் பாடிய அரிசில்கிழார் என்ற புலவருக்கு ஒன்பது நூறாயிரம் 'காணம்' பொன் பரிசில் தந்தான்.[55] கழங்கு, கழற்சிக்காய் என்ற சில அளவுகள் வாணிகத்தில் இருந்தன.

**கலைகள்:**

கலைகளில் ஓவியம், இசை, கூத்து, நாடகம் ஆகியவவை மிக உயர்ந்த நிலையை எட்டியிருந்தன. நாடக அரங்கில் அழகான வண்ணங்களில் ஓவியம் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் (எழினிகள்) தொங்கவிடப்பட்டன. ஆண்களும் பெண்களும் கூத்திலும் இசையிலும் மேம்பட்டு இருந்தனர். பாணரும் விறலியரும் பாடியும் ஆடியும் மக்களை மகிழ்வித்தனர். கரிகால் சோழனின் மகள் ஆதிமந்தியின் கணவன்

ஆட்டனத்தி நடனத்தில் ஈடிணையற்று விளங்கினான். பொதுவாகக் கூத்துகளில் 11 வகை உண்டு. அவை கடையம், மரக்கால், குடை, துடி, அல்லியம், மல், குடம், பேடு, பாவை, கொடுகொட்டி, பாண்டரங்கம் என்பன. ஏழிசையின் பெயர்களாக அக்காலத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என இருந்தன. யாழும் குழலும் இன்னிசைக் கருவிகளாகப் பயன்பட்டன. 21 நரம்புகள் கட்டிய பேரியாழும், 19 நரம்புகள் கட்டிய மகர யாழும், 14 நரம்புகள் கட்டிய சகோட யாழும், 7 நரம்புகள் கட்டிய செங்கோட்டு யாழும் வழக்கத்தில் இருந்தன.[56]

கல்வி:

கல்வியின் சிறப்பைச் சங்கத்தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். எக்குலத்தைச் சார்ந்தவர்களும், செல்வர்களும், வறியோரும், மன்னரும், எளியகுடி மக்களுமான ஆண் பெண் இருபாலரும் கல்வியைப் பெற்றனர் அறிஞர் அமர்ந்திருந்த ஓரவையின் முன்னணியில் அமர்த்தப்பெறும் வாய்ப்பைத் தம் மகனுக்கு ஒவ்வொரு தந்தையும் தேடிக்கொடுக்க வேண்டுமென்பது தமிழர்கண்ட அறம்.[57]

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே'

என்று பெண்கள் கருதினர்.[58] 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும், கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும், அவள்கண் படுமே'[59] உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், ஆசிரியரிடம் அடக்கமாகவும் அன்பாகவும் அமர்ந்து கல்வி கற்க வேண்டுமெனப் பாண்டிய மன்னன் ஒருவன் கூறுகின்றான்.[60] ஒவ்வொரு ஊரிலும் கல்வி பயிற்றும் கணக்காயர் இருந்தனர். 'கணக்காயர் இல்லாத ஊரும்— நன்மை பயத்தல் இல' என்று கூறப்படுகிறது.[61] பெரும்பாலும் திண்ணைகளிலேயே பள்ளிகள் நடைபெற்று வந்தன. மாணவர்கள் ஓலையின்மேல் எழுத்தாணி கொண்டு எழுதினர். மாணவர்கள் கல்வி பயிலும்போது இரந்துண்ணும் பழக்கம் அக்காலத்தில் இருந்து வந்ததென அறிகிறோம்.[62] பல குலத்தைச்சார்ந்த புலவர்கள் தமிழகமெங்கும் உலவி வந்ததையும் மன்னர்கள் உதவியுடன் மதுரையில் அவர்கள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்து வந்ததையும் பல சங்க நூல்கள் கூறுகின்றன. ஒருவருடைய

புலமையை அறிஞர்கள் எளிதில் ஒப்புக்கொள்வதில்லை. அவர்களுடைய பாடல்களோ நூல்களோ தமிழ்ச்சங்கத்தார் முன்பு அரங்கேற்றம் பெற வேண்டும். சங்கப்புலவர்கள் அப்புலவரைப் புலமை நிரம்பிய சான்றோன் என ஒருங்கே ஒப்புக் கொள்ள வேண்டும்.

கணிதத்தில் மிக நுண்ணிய அளவையையும், மிகப் பெரிய அளவையையும் கையாண்டு வந்தனர். 'ஏரம்பம்' என்ற கணித நூல் பழங்காலத்தில் இருந்தது. மக்களுக்கு வானவியல் புலமையும் இருந்தது.[63] ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது எனக் கோள்களை அழைத்தனர்.[64]

### குலம்:

நானில மக்களைப் போன்றே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனப்படும் நாற்பெரும் குலத்தாரும் தொழில் முறையால் வேறுபட்டு இருந்தனர்.

'வேற்றுமை தெரிந்த நாற்பால்' (புறம் - 183)

தமிழகத்தில் தாங்கள் செய்து வந்த தொழிலுக்கேற்பப் பல குலங்கள் தோன்றியிருந்தன. அளவர், இடையர், உமணர், உழவர், எயினர், கடம்பர், குயவர், குறவர், குறும்பர், கூத்தர், கொல்லர், தச்சர், துடியர், பரதவர், பறையர், பாணர், புலையர், பொருநர், வண்ணான், வேடர் என்பன அவற்றில் சில. இக்குலங்களுக்குள் உணவுக்கலப்போ, திருமணக்கலப்போ தடை செய்யப்படவில்லை. அந்தணர் மீது அரசர்களுக்கும், குடிமக்களுக்கும் நல்ல ஈடுபாடு இருந்து வந்தது. மன்னர்கள் அயல்நாட்டு மீது போர் தொடுக்கும் போது முதலில் பார்ப்பனரை ஊரின் புறத்தே போகும்படி முன்னறிவிப்புச் செய்தல் போர் அறமாக இருந்தது.[65] சமயக்கல்வி, தத்துவம் ஆகியவற்றில் வல்லுனராக இருந்தனர். பார்ப்பனருள் சிலர் மக்களின் வெறுப்புக்கு இலக்கான வாழ்க்கையையும் வாழ்ந்து வந்தனர் என அறிகிறோம்.[66]

அரசியல்:

நாட்டின் தலைவனாகவும், அரசியலின் தலைவனாகவும் மன்னன் ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தான். அரசாங்கமானது மன்னனின் பரம்பரை உடைமையாய் இருந்தது. மன்னனின் மறைவையடுத்து மூத்த மகன் பட்டத்துக்கு வருவான். மகளிர் அரசு புரிந்ததாகச் சங்க இலக்கியத்தில் சான்று ஏதுமில்லை. அரசவை காலையில் கூடுவது வழக்கம். அதற்கு 'நாளவை' என்றும், 'நாளிருக்கை' என்றும் பெயர் வழங்கி வந்தது.[67] அரசருடன் அவரது மனைவியும் அரசவையில் அமர்வது மரபாக இருந்து வந்தது. அரசவையில் இசை முழங்கிக் கொண்டிருக்கும். அரசனுக்கு அறவுரைகளைத் தேவையான போது எடுத்துக்கூறும் உரிமைகளை ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற குழுவினர் பெற்றிருந்தனர். ஐம்பெருங்குழுவில் புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், ஒற்றர், அமைச்சர் ஆகியோரும் எண்பேராயத்தில் அரசுக் கணக்கர்கள், கருமக்காரர், கனகசுற்றம், அரண்மனைக் காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளி மறவர் (குதிரைப்படைத்தலைவர்) ஆகியோரும் இருந்தனர்.

ஒற்றர்கள் வாயிலாக மக்கள் நிலையை அறிந்து அதற்கேற்றவாறு அரசர்கள் ஆட்சி நடத்தி வந்தனர். ஒற்றர்கள் மீது வேறு ஒற்றர்களையும் ஏவி உண்மையை அறிந்து வந்தனர். ஊராண்மையும் நாட்டாண்மையும் குழுக்களாகச் செயல்பட்டன. ஊர்க்கூட்டம் பொதியில், அம்பலம், அவை என அழைக்கப்பட்டது. பொதியில் சாணத்தால் மெழுகப்பட்டிருந்ததென அறிகிறோம்.[68] சில ஊர்களில் பெரிய மரத்தடியில் மன்றம் அல்லது பொதியில் கூடியது. குறிப்பாக வேப்பமரத்தடியில் இவை அமைந்திருந்தன.[69] ஊரின் சில பகுதிகள் சேரிகள் என அழைக்கப்பட்டன. தாழ்ந்த வகுப்பினர் வாழ்ந்த இடங்களுக்கு அப்பெயர் வழங்கப்பட்டன என்று கூற முடியாது. பறைச்சேரி என்பது போலப் பார்ப்பனச்சேரி, இடைச்சேரி என்றும் பெயர்கள் இருந்தன. இரவுப்பொழுதில் நகரங்கள் அக்கறையாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

**சமயம்:**

தமிழருக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்திருந்த ஆதிக்குடிகளின் கடவுள் கொள்கைகளும், தமிழ் மக்களின் சமயக் கொள்கைகளும் ஆரியரின் சமயக் கொள்கைகளும் ஒன்று கலந்து சங்க காலத்து மக்கள் சமுதாயத்தில் இடம்பெற்று இருந்தன. தமிழர் உயிர் துறந்த வீரர்கட்குக் கல்நாட்டி வணங்கினர். வீரக்கல் நடும் வழக்கம் தொல்காப்பியத்திற்கு முன்பே காணப்பட்டது. அந்நடுகற்களுக்கு மலர்மாலை அணிவித்து மயிற்பீலிகளால் அணி செய்தனர்.[70] பேய் பூதங்களில் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் காலத்தில் மரணத்திற்குப் பின் துறக்கம், நரகம் என்ற நிலைகளைப் பற்றிய கொள்கைகள் இருந்தன.[71] மரத்தினைத் தெய்வமாக வழிபட்டனர். வேம்பு, கடம்பு, வில்வம், கொன்றை முதலிய மரங்கள் தெய்வீகம் பெற்று இருந்தன. மன்னர்கள் தமக்கென, காவல் மரங்களைக் கொண்டிருந்தனர்.[72] சங்க காலத்திலும் ஊழையும் கடவுளையும் பொய்யெனக் கருதியவர்கள் இருந்தனர். அக்காலப் புலவர்கள் அவர்களுடைய கொள்கையை ஏற்றுக் கொண்டிலர்; வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அதை அவர்கள் வன்மையாக மறுத்து வந்தனர்.[73] உற்பாதங்களிலும், தீய கனவுகளிலும், பறவை நிமித்தத்திலும், விண்ணினின்றும் கொள்ளி மீன் விழுவதிலும், உன்னமரம் பூத்ததிலும் மக்கள் பின்னர் நிகழவிருந்த நிகழ்ச்சிகளை முன்னரே அறிவிக்கும் குறிகளைக் கண்டனர்.

## அடிக்குறிப்புகள்

1) பாலைக்கலி-8. 2) குறுந்தொகை - 300. 3) குறள் - 196. 4) அகநானூறு - 86,136. 5) சீவகசிந்தாமணி - 2697. 6) குறள் - 54. 7) குறள் - 55. 9)தொல் பொருள்- கற்பியல் - 49. 10) தொல் பொருள் - அகத்திணை - 35. 11)சிலப்பதிகாரம் - 16:71-73. 12) புறத்திணை - 188. 13) புறத்திணை - 312. 14) புறத்திணை - 246. 15) அகம் - 33. 16) புறம் - 143. 17) புறம் - 239, அகம் - 37. 18) பெரும்பாணாற்றுப்படை - 108,110. 19)அகம் - 37.

20)புறம் - 111. 21) பெரும்பாண் - 34-35. 22) பெரும்பாண் - 100. 23)புறம் - 113. 24) புறம் - 56:18/ மலைபடுகடாம் - 522. 25) புறம் - 392:16, அகம் - 348. 26)சிறுபாணாற்றுப்படை - 237. 27)நற்றிணை - 320,359, புறம் - 61,116,248,340,341. 28)சிலப் - 14,250-7. 29) புறம்-337, 338:9-11, பொருணராற்றுப்படை - 82-83, சிறுபாண் - 235-236. 30)சிலப்-5:157, 6:166, 28:80. 31) முல்லைக்கலி - 11:17. 32) சிலப் - 6:88. 33)மதுரைகாஞ்சி - 431-3, 513. 34) சிலப் - 6:83-108. 35) கலித்தொகை - 85. 36) பட்டினப்பாலை - 20-25. 37) புறம் - 147. 39) குறிஞ்சி -61-67. 40) புறம்-74:4. 41) குறுந்தொகை235. 42) புறம் -22. 43) மணிமேகலை -29:61. 44) அகம் - 87:12, நெடுநல்வாடை - 101-5. 45) நெடுநல்-76-9. 46) பெரும்பாண்-127. 47) சிலப் - 16:5, பெரும்பாண் - 298. 48) மணி-19:115. 49) இன்னாநாற்பது - 3. 50) அகம் - 24:1-3. 51)சிலப்-5:9-39. 52) பெரும்பாண் - 161-5. 53) சிலப்-5:111-2. 54)குறள் -390. 55) பதிற்றுப்பற்று-பதிகம்-8. 56) நற்றிணை-113. 57)குறள் - 67. 58) புறம்-132. 59) புறம்-183. 60) புறம்-183. 61) திரிக்கடுகம்-10. 62) குறுந்-33. 63)குறள்=392(பரி-உரை). 64) தேவாராம் - 2:85:9. 65) புறம் - 9. 66) கலித்தொகை - 65. 67) புறம் - 29:5,543. 68) பட்டின-246-49. 69) புறம்-76,79,371 70)புறம்-232,264 71)புறம்-240:6, பதிற்றுபத்து - 13:15 72) புறம்-23,36,57,162,336 73)புறம்-29:11,52.

# ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - 1

அ.மா. பரிமணம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தொல்காப்பியர் தம் நூலில், தமிழ் மொழிக்கு இலக்கணம் கூறுகின்றேன் என்று யாண்டும் கூறவில்லை. ழகர ஈற்றுச் சொற்கள் வருமொழியொடு புணர்தற்கான விதிகூறுமிடத்து, மொழியை உணர்த்தும் சொல்லாகிய 'தமிழ்' வருமொழியொடு எவ்வாறு புணரும் என்று கூறும்போது இச்சொல்லைப் பயன்படுத்துகின்றார். (தொல், எழுத்து 385) தொல்காப்பியர் தாம் வகுத்த இலக்கணம் தமிழ் மொழிக்குத்தான் என்பதனைத் தம் முதல் நூற்பாவிலேயே உய்த்துணரவைத்துள்ளார். பொதுவாக மொழிகள் அகரத்தில் தொடங்கினாலும் முப்பது ஒலிகளைக் கொண்டதும், னகரத்தில் முடிவதுமான மொழி தமிழேயாகும் என்பதனை, 'எழுத்தெனப்படுவ அகரமுதல, னகர இறுவாய் முப்பஃது என்ப' என்பதனால் (தொல், எழுத்து 1) தெளிவுபடுத்தியுள்ளார். அதனால் அவர்தம் நூலில் கூறும் இலக்கணம் (எழுத்து, சொல், பொருள்) தமிழ்மொழிக்கே உரியது என்பது தெளிவாகிறது. வடமொழியில் எழுத்தெண்ணிக்கையும், ஈற்றெழுத்தும் வேறுபடும். 'என்ப' என்றதனால் இந்த எண்ணிக்கை வரையறையும், நெடுங்கணக்கு வரிசையும், நாம் வகுத்தவை அல்ல என்றும், தமக்கு முன்னர் நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்தவை என்றும் புலப்படுத்தியுள்ளார். ஆனால் தொல்காப்பியரோடு உடன்பயின்ற மாணவராகிய பனம்பாரனார் அந்நூலினுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரத்தால், தொல்காப்பியர் தம் காலத்திற்கு முன்னர்த் தமிழ்கூறு நல்லுலகில் நிலவிய, செந்தமிழ் இயற்கை சிவணி எழுந்த, முந்து நூல்களைப் பயின்று, முறைப்பட எண்ணிப் போக்கறு பனுவலாகத் தொல்காப்பியத்தை உருவாக்கினார் என்று உணர்த்தியுள்ளார்.

மக்களினம் தம் உள்ளக் கருத்தினைப் புலப்படுத்தப் பேச்சொலியையும், அதனைப் பின்வருவோரும் உணர்ந்து பயன் கொள்ளும் வகை நிலைப்படுத்த எழுத்தையும் (வரிவடிவு) கண்டது.

அதன் பயனாக மனிதகுலம் காலங்கள்தோறும் வளர்ச்சியும், உயர்ச்சியும் எய்திவருகின்றது. தாம் ஒலிப்பனவற்றை நிலைப்படுத்தும் வரிவடிவம் அமைத்துக் கொள்ளும் வாய்ப்பின்மையால் விலங்கு முதலான அஃறிணை உயிரினங்கட்கு வளர்ச்சியும் உயர்ச்சியும் (நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில்) இல்லையாயின.

மனிதகுலம் முழுவதற்கும், ஒலி எழுப்புதற்குரிய உடலுறுப்புகள் ஒன்றாகவே அமைந்துள்ளன. தமிழ்மொழிக்கான ஒலிகள் தோன்றும் உறுப்புக்காளாக உந்தி, தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நாக்கு, மூக்கு அண்ணம் ஆகியவற்றைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். (தொல், எழுத்து 83) இவ்வுறுப்புகள் மனித குலம் அனைத்திற்கும் பொருந்துவதாகும். இவ்வுறுப்புகளைக் கொண்டு, செவிகொண்டுணரும் ஒலிகள் அனைத்தையும் எழுப்பிவிட முடியாது. சிற்றுயிர்கள் எழுப்பும் ஒலிகள், இயற்கை நிகழ்ச்சிகளின்போது எழும் ஒலிகள் போன்றவற்றை மனிதர்களால் எழுப்ப இயலாது. ஒருவன் குளத்து நீரில் பாய்கின்றபோது எழும் ஒலியை அப்படியே நாம் ஒலிக்கவோ, எழுதிக்காட்டவோ முடியாதபோது, "துடுமெனப் பாய்ந்து குளித்து மணற்கொண்ட கல்லா இளமை" (புறம் 243 : 9, 10) என்று புலவர் ஒருவகையால் அதனைப் புலப்படுத்துவார். மனிதர்களின் பேச்சுறுப்புக்கள் ஒன்றாயினும் அவர்கள் வாழுமிடம், தட்பவெட்பநிலை, பயிற்சி போன்றவற்றால் சில ஒலிகளை எழுப்புவதில் சிரமம் தோன்றலாம். பிற மொழிகளில் இல்லாத ழகரத்தை ஒலிப்பதில் வேற்றுமொழியாளர் வேறுபடுமாற்றைக் காணலாம். அந்தப் பிறமொழிக் குடும்பத்தினர் தமிழகத்தில் வாழும்போது பிறந்த குழந்தைகள் தமிழகத்தில் வளர்ந்தால் எளிதாக ழகரத்தை ஒலிக்கக் காணலாம். தொன்மையான மொழி எதுவாயினும் அதன் எழுத்துக்களின் ஒலிவடிவத்தை எவர் எக்காலத்தில் கண்டனர் என்பதனை அறிவது அரிதாகும். ஒரு மொழியினர் தம் கருத்தைப் புலப்படுத்துவதற்குத் தேவையான ஒலிகளைக் கண்டுகொண்டதும், அவற்றைப் பதிவு செய்வதற்கான வரிவடிவங்களை அமைத்துக் கொண்டதும் பல காலங்களில் நடைபெற்றிருக்கலாம். அதனால்தான் இன்று உலகில் பண்பட்டனவும் பண்படாதனவுமாகப் பல மொழிகள் வழங்கக் காண்கிறோம். ஒவ்வொரு மொழியினரும் தம் மொழி ஒலிகளை ஆவணப் படுத்திக்கொள்ள அமைத்த வரிவடிவங்களும் பலப்பலவாக அமைந்துள்ளன. அதனால் 'அ' என்னும்

தமிழ்க் குறியீட்டினால் ஒலிக்கப்படும் ஒலியினை ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறாக வரிவடிவில் எழுதிக் காட்டப்படுகின்றது. ஒரு மொழி எழுத்துக்களின் வரிவடிவங்கள் காலங்கள் தோறும் மாறுபடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. தமிழ்மொழியும் வரிவடிவமாற்றங்களை அடைந்தே வந்துள்ளது. அதன் விளைவுதான் இக்கட்டுரையின் தொடக்கப்பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி வள்ளுவர் ஏட்டினை நாமும் நமது ஏட்டினை வள்ளுவரும், மொழி ஒன்றாயினும் படிக்க இயலாத நிலை தோன்றியுள்ளதாகும். இருசாராரும் தம் ஏடுகளைத் தாங்களே படிப்பராயின், ஒரே வாசகமாக அமைவதனைக் காணலாம்.

தொல்காப்பியம், தமிழ்மொழி நன்கு செம்மைப்பட்டு வழக்கிலும் செய்யுளிலும் ஆட்சிபெற்று முழுமையுற்ற நிலையில் தோன்றியதாதலின் தமிழ்மொழிக்குரிய, தேவையான ஒலிவடிவங்கள் இனையவென்றும் இத்துணையவென்றும் நூலின் தொடக்கத்தே அதன் ஆசிரியரால் வரையறுத்துரைக்கப்பட்டுள்ளது. முழுமை எய்தியபோதிலும் தமிழ்மொழி மக்கள் வழக்கில் வாழ்ந்துவரும் மொழியாதலின், பிறமொழி மக்களோடு கொடுத்தும் கொண்டும் மொழித்தொடர்பு கொள்ளும் வாய்ப்புண்டாதலை உணர்ந்து அதற்கான வழிமுறைகளைத் தம் இலக்கணத்தில் அமைத்துள்ளார். அது, தமிழ் மொழியின் தனித்தன்மை கெடாது பாதுகாத்ததற்குக் கூறப்பட்ட பாதுகாப்பு ஆணையாகவும் விளங்குகின்றது.

*'வடசொற்கிளவி வடஎழுத்து ஒரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே.' (தொல். சொல் 401)*

*'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்'*
*(தொல். சொல். 402)*

என்பன தமிழ் மொழிக் காப்புப் பற்றிய தொல்காப்பிய ஆணைகளாகும்.

எழுத்தென்னும் காரணப்பெயர் வரிவடிவத்தினைக் குறிப்பதாகக் காணப்பட்டாலும், 'எழுத்தெனப்படுப' என்னும் தம் தொல்காப்பியத் தொடக்கத் தொடரால் தொல்காப்பியர் ஒலிவடிவினையே குறித்துள்ளார். பின்னர்த் தோன்றிய பவணந்தியார் தம் நன்னூலில் எழுத்தினை விளக்கும்

விளக்கத்தால் இதனைத் தெளிவாக உணரலாம். "மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" என்பது நன்னூலார் வாக்காகும் (நன். 58) பவணந்திமுனிவர், கடவுட் கோட்பாட்டினை உடன்படாத சமண சமயத்தவராதலின், மொழி தெய்வத்தால் உருவாக்கப்பட்டது என்னும் கொள்கையை ஏற்காமல், அணுச் செறிவால் ஆக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். இதனை விளக்கும் ஆறுமுக நாவலர், "அணுத்திரள் - அணுக்கூட்டம். இங்கே அணுவென்றது செவிப்புலனாம் அணுவை, அது ஒலி நுட்பம்" என்று விளக்கியுள்ளார். இந்த விளக்கம், மொழித் தோற்றத்திற்கான அடிப்படையினை அறிவியலார் ஏற்கும் வண்ணம் கூறப்பட்டதாகும். (நன்னூல், நாவலர் உரை. 58)

தொல்காப்பியர், தம் நூலில் தமிழ் எழுத்துக்களின் ஒலி வடிவத்திற்கே இலக்கணம் கூறியுள்ளார். எனினும் ஒரு சில எழுத்துக்களின் வரிவடிவத்தையும் கூறியுள்ளதனைக் காணலாம். எடுத்துக்காட்டாக, "உட்பெறுபுள்ளி உருவாகும்மே", "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்", "எகர ஒகரத்தியற் கையுமற்றே" (தொல். எழுத்து. 14, 15, 16). இலக்கணிகள் இவைபற்றி விரிவாக விளக்கியுள்ளனர். இவற்றை நோக்குங்கால், ஓர் எழுத்தின் ஒலி அளவினை (மாத்திரை)க் குறைப்பதற்கு அவ்வெழுத்தின் மேற்புறம் புள்ளியிடப் பெற்றது என்னும் உண்மையை உணரலாம். புள்ளிபெறும் எழுத்துக்கள் சிலவற்றிற்கு மட்டும் வரிவடி கூறப்பட்டது ஏன்? தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டாயினும், அவற்றுள் அ, இ. உ. ஆகிய மூன்றுமே மிக மிக அடிப்டையானது, இயல்பானதுமாகும். அதனால் அவற்றின் நீட்டம் நெடில் எனப் பெற்றுத் தனிக்குறியீடு பெற்றன. இம்மூவொலியின் நுட்பமான இணைப்பால் முதற்கண் தோன்றுவன ஏ, ஓ ஆகிய இரண்டுமே. இந்த நுட்பம் எஃகுச் செவியுடையார்க்கன்றிப் புலப்படாது. வலிதான வர்க்க ஒலிகளில் நாட்டங்கொண்டு அவற்றிற்கு வரிவடிவம் அமைத்துக் கொண்ட வடமொழியாளர் (சமசுகிருத மொழியினர்) இந்த ஒலி நுட்பம் அறியாமையால் அவர்கள்தம் உயிரெழுத்துப் பட்டியலுள் எகர ஒகரங்கட்கு இடமில்லாது போயிற்று. அகர இகர உகர ஒலிக்கூட்டால் இயல்பாகத் தேன்றுவன நெடிலாதலின் அவ்வாறு

தோன்றும் ஏகார ஓகாரங்களுக்குரிய குறில் ஒலியினை அதனை, அவ்வெழுத்துக்களின் மேல் புள்ளியிடுவதன் வாயிலாக அமைத்துக் கொண்டார்கள். தமிழ்மொழியின் ஒலி நுட்பச் சிறப்பிற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும். இல்லையேல், 'அ' எழுத்தினை நெடில் எனக்கொண்டு, அதன்மேல் ஒரு புள்ளி வைத்துக் குறிலாக்கிக் காட்டியிருக்கலாமே!.

தமிழில் ப், ம் பிறப்பினைக் கூறுங்கால், "இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்" எனத் தொல்காப்பியமும் (தொல். எழுத்து. 97), "மீகீழ் இதழுறப் பம்மப்பிறக்கும்" என நன்னூலும் (நன்னூல். 81) கூறுகின்றன. பிறக்குமிடம் ஒன்றாயினும், உள்ளுறு உறுப்புகளின் முயற்சி வேறுபாட்டால் ப், ம் வேற்றொலியாய் வெளிவருகிறது. அவ்வேறுபாடு விளங்கப் பகரத்திற்கு உள்ளே புள்ளியிட்டு மகரத்தை எழுதினர். 'உட்பெறுபுள்ளி உருவாகும்மே' எனும் தொல்காப்பியவிதிப்படி அவர்காலத்தில் மகரம் ப் என்று எழுதப்பட்டது. இதனை நூற்றாண்டு வாரியாகத் தமிழ் வரிவடிவ மாற்றத்தைக் காட்டும் அட்டவணையில் நன்கு காணலாம். காலப்போக்கில், மகரம் எகர ஒகரங்கள் ஆகியன பற்றிய வரிவடிவங்கள் மாற்றமடைந்து விட்டன. மேலும், மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடுதல் மாறிப் புள்ளியிடாமல் எழுதிய நிலையும், பின்னர் மீண்டும் புள்ளியிட்டெழுதும் நிலையும் உருவாயின, இவ்வேறுபாடுகளையெல்லாம் திருக்கோயிற் சுவர்களும் செப்பேடுகளும் மேலான நிலையில் நின்று காட்டி நிற்கின்றன.

இனித் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் எவ்வகையில் எழுதப்பட்டன என்பதனைக் காண்பது பயனுடையதாகும். இந்த இலக்கண இலக்கிய நூற்செல்வங்கள் தமிழ்மொழிக்குரியன வாதலின் தமிழ் மொழியில் எழுதப்பட்டன என்பதிலும் ஐயமின்று. அவை பனைஓலைகளில் எழுத்தாணியால் எழுதப்பட்டன என்பதிலும் ஐயமின்று. அவை இன்றுள்ள தமிழ்வரிவடிவில் எழுதப்படவில்லை என்பதும், நம்மால் படிக்க முடியாத ஒருவகைத் தமிழ் வரிவடிவத்தில் எழுதப்பட்டன என்பதும் உண்மைகளாகும். அவை மொழித்திறம் பெற்றுப் புலவராயினார்க்கே உரியனவாதலின், அவற்றைப் பாறைகளிலோ, உலோகத்தகடுகளிலோ பொறித்துக் காக்கும் இன்றியமையாமை ஏற்படாததால் அவ்வாறு செய்யப்படவில்லை. அதனால் அந்தப் பழைய

வடிவத்தைப் பார்க்கவும் படிக்கவுமான வாய்ப்பு இல்லாது போயிற்று. ஆனால் சங்க காலத்தை ஒட்டி அடுத்த காலத்தைச் சேர்ந்தனவாகக் கருதப்படும் சில பாறைக்கல்வெட்டுக்களைத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் அரிதின் முயன்று கண்டு பிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாறைக்கல்வெட்டுக்களில் குகைக் கல்வெட்டுக்களில் சிலவற்றை (17) தமிழ்நாட்டில் பிராமிக் கல்வெட்டுக்கள் என்னும் தலைப்பில், 'தென்னிந்தியப் பண்டைத் தொல்லெலுத்தியல் என்னும் தம் ஆய்வு நூலில் (Early South Indian Palaeography) மூல நிழற்படத்தோடு டாக்டர். T.V. மகாலிங்கம் அவர்கள் ஆராய்ந்துள்ளார். தம் நூலின் இணைப்புப்பகுதி நான்கில் தான் காட்டியுள்ள கல்வெட்டுக்களின் இருப்பிடம் முதலிய சில விவரங்ளைக் காட்டியுள்ளார். தாம் ஆராய்ந்த அந்த 17 கல்வெட்டுக்களின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலுள்ள காலமாகும் என்பதனையும் பிறிதொரு அட்டவணையில் குறிப்பிட்டுள்ளார். திரு. ஐராவதம் மகாதேவன், டாக்டர். நாகசாமி போன்ற தொல்லியல் ஆய்வாளர்களும் இப்பாறைக் கல்வெட்டுக்களை ஆராய்ந்துள்ளனர். அக்கல்வெட்டுக்களின் எழுத்தமைதி, வாசகம், பொருள்காணல் போன்றவற்றில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. இந்தக் கல்வெட்டுக்கள் சுருக்கமாக இரண்டு மூன்று வரிகளில் (சில 10 வரிகளில்) அடங்குவனவாக இருத்தலாலும், பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தனவாக இருத்ததாலும் ஆய்வாளர்கள் அவரவர்கள் தாம்தாம் அறிந்த முறையில் படிக்க முற்பட்டதாலும் கருத்து வேறுபாடுகள் தோன்றியது இயல்பேயாகும். எனினும் இந்த எழுத்துக்கள் அவை தோன்றிய காலத்திற்கு முற்பட்ட காலத்தினவான தொல்காப்பியம் சங்கநூல்களின் வரிவடிவத்திற்கு முற்றிலும் மாறுபட்டனவாக இருக்கவியலாது. அவற்றின் வரிவடிவம் பெயர் ஆகியவற்றை அறிய இக்கல்வெட்டுக்கள் பெரிதும் உதவும்.

இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் ஊர்களுக்குப் புறம்பேயுள்ள குன்றுகளில் அமைந்த இயற்கையான பாறைத்தளங்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. இவைபோலும் கல்வெட்டுக்கள் சில இதுகாறும் கண்டறியப்படாமலும் இருத்தல் கூடும். இவை இயற்கையாக அமைந்த குகையின் பாறைத் தளத்தில் உள்ளமையால் குகைக் கல்வெட்டுக்கள்

என்று கூறவும் படும். தனிமை, எளிதில் யாரும் சென்றடைய முடியாமை, தூய்மையான சுற்றுச்சூழல். மழை முதலிவற்றால் சேதமுறாமை போன்ற காரணங்களால் சமய அடிப்படையில் நோன்பு மேற்கொள்ளும் துறவியர்க்கு இவ்விடங்கள் மிகவும் ஏற்றனவாகும். பொதுவாக எச்சமயத்துறவியருக்கும் இவ்விடங்கள் ஏற்றன என்று கூறலாமாயினும் சமணத்துறவிக்குப் பெரிதும் ஏற்றனவாக உள்ளன எனலாம். சமண சமயப் பிரிவுகளுள் திகம்பரருக்கு (திக்கினையே ஆடையாகக் கொண்டவர் - ஆடையிலி) மிகவும் பொருந்துவனவாகும்..

இவ்வாறு அமைந்தனவாக, அரிட்டாபட்டி (மீனாட்சிபுரம், மாங்குளம்) கீழவளவு, கொங்கர் புளியங்குளம், சிற்றன்னவாசல், திருப்பரங்குன்றம், புகளூர், குன்றக்குடி, அரச்சலூர் முதலிய பல இடங்களில் அமைந்த குகைத் தளப்பாறைக் கல்வெட்டுக்களைக் கூறலாம். இக்குகைகளில் பெரும்பாலும் சமணத் துறவியர் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகின்றது. ஒரு தலைமைத்துறவியர் தலைமையில் ஒன்றுக்கு மேற்பட்ட துறவியர் ஒரு குகைத்தளத்தில் இருந்துள்ளமையினை அங்குள்ள பல படுக்கைகளால் அறியலாம். இயற்கையாக அமைந்த குகைத்தளத்தில் ஒருவர் படுப்பதற்கு வேண்டிய அளவில் பாறையினை மழுமழுப்பாக்கியும், தலைப்புறத்தில் தலையணைபோலத் திரண்டபகுதி அமையச் செய்தும் கற்படுக்கைகள் அமைக்கப்படுவது வழக்கம். யாருக்காக யார் அமைத்தது இப்படுக்கை என்னும் செய்தி படுக்கை அருகிலாவது, பாறை முகப்பிலாவது பொறிக்கப்படும். அச்செய்திகளே பெரும்பாலும் இவ்வகைக் குகைகளில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களின் பொதுவான பொருளாகின்றது. இவ்வாறமைக்கப்பட்டுள்ள குகைத்தளப் பாறைக் கல்வெட்டுக்களே இன்று தமிழில் கிடைத்துள்ள எழுத்துக்களின் பழமையான வரி வடிவங்களாகக் கொள்ளுவது பொருத்தமுடையதாகும்.

பழமையான இக்குகைக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியில் அமைந்துள்ளதெனினும் இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள வரிவடிவின் பெயர் காண்பதில் தொல்லெழுத்தாய்வாளர்கள் மாறுபடுகின்றனர்.

திரு. ஐராவதம் மகாதேவன் போன்றார் இவ்வரிவடிவத்தைப் 'பிராமி' என்று கூறுகின்றார். வடநாட்டில் பண்டு வழங்கிய 'பிராமி' எழுத்துக்களில் காணப்படாத சில எழுத்து வடிவங்கள் (ழ, ள, ற, ன) இவற்றில் காணப்படுவதாலும், வேறுசில வேறுபாடுகள் கருதியும்

இவற்றைத் 'தமிழ்ப்பிராமி' என்று கொள்ளலாம் என்பர். ஆனால் தொல்லியலறிஞர் திரு. நாகசாமி அவர்கள் இவ்வெழுத்துக்களைத் 'தமிழி' என்று குறிப்பிடலாம் என்பர். பண்டு இந்தியாவில் வழங்கிய பல்வேறு மொழிகளின் எழுத்துக்கள் (இலிபி) பெயரை நிரல்படுத்திக் காட்டும் இரண்டு நூல்கள் குறிப்பிடத்தக்கன. ஒன்று சமணச் சார்பாக அமைந்த 'சமவாயாங்க சுத்த' (Samavayanga Sutta) என்பது. மற்றொன்று 'இலலித வித்தர' (Lalitavistara) என்பது.

முன்னது பிராகிருத மொழியிலும், பின்னது சமசுகிருதத்திலும் (Sanskrit) அமைந்தனவாகும். பதினெட்டு வகை எழுத்துக்களின் (இலிபிகள் - Libi) பெயர்களை நிரல்படுத்தும் சமண நூல், முதற்பெயராகப் 'பம்மி' (Bambhi ie. Brahmi) எனும் பெயரையும், பதினேழாவது பெயராகத் 'தமிழி' (Damili,ie. Dravidian or Tamil) எனும் பெயரையும் குறிப்பிட்டுள்ளது. சற்றே பின்னர்த்தோன்றிய பௌத்த நூல். முதற்பெயராகப் பிராமி (Brahmi) எனும் பெயரைக் கூறித் தமிழி (Damili) பெயரைக் கூறாமல் அதன் மாற்றுப் பெயராகப் பன்னிரண்டாவது இடத்தில் 'திராவிடலிபி' (Dravidalibi) எனும் பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இந்திய வரலாற்றில் அசோக மன்னன் காலம் வரையறுக்கப்பட்டுள்ளமையால், அவன் தன் கல்வெட்டுக்களில் பயன்படுத்திய பிராமி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பண்டைத் தமிழ் வரிவடிவத்தையும் காண முற்பட்டு அது பிராமித் தொடர்புடையது என்று ஆய்வாளர் சிலர் கருதலாயினர். பதினெட்டு வகை எழுத்துப் பெயர்ப் பட்டியலுள், பிராமியும், தமிழி (Damili)யும் இடம் பெற்றுள்ளமையால் இரண்டும் தனித்தனி அடிப்படையில் அமைந்தவை என்பதனை எண்ணவில்லை. (இந்திய வரலாறு எழுத முற்பட்டோர்,. கங்கைக்கரை நாகரிகத்தை முதன்மையாகக் கொண்டு, காவிரிக்கரை நாகரிகத்தைப் பிற்படுத்தியதுபோல, இந்தியச் சமய வரலாற்றை வரைய முற்படுவோர் வேத அடிப்படையிலான வைதிக சமயத்தை முதன்மைப் படுத்தித் தமிழகத்துச் சமயநெறிகளானவற்றைப் (சைவம், வைணவம்) பிற்படுத்தியதுபோல, மொழி ஆய்விலும் வடஇந்திய மொழிகளை (பிராமி, சமசுகிருதம்) முதன்மைப் படுத்தித் தென்னகத்துத் தொன்மொழியாகிய தமிழ்மொழியைப் பிற்படுத்தினரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தொடரும்......

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 741116